December 2020

# வித்யாமலர்



## Published by


**Vidyarambam Trust**

**85/New No: 94, Park View Apartment, G.N.Chetty Road, T.Nagar, Chennai**

# நிகழ்வுகள்

## திருநெல்வேலி மாவட்டம்

**01.05.20 முதல் 31.05.20** வரை மே மாதம் முழுவதும் வித்யாரம்ப தொண்டர்கள் வீட்டிலிருந்த படியே பணியைத் தொடங்கினோம். **01.06.20 முதல் 31.07.20** வாரத்தில் சில நாட்கள் அலுவலகத்திற்கு வந்திருந்து கீழ்க்கண்ட கற்றல் உபகரணங்களை உருவாக்கினார்கள்.





வாரத்திற்கு ஒரு முறை குழந்தைகளுக்கு **Toy van material** கொண்டு Game சொல்லிக்கொடுக்கப்பட்டது.





**ஆகஸ்ட் 15** ஆம் நாள் **Conference call** மூலம் **RV School** குழந்தைகள், ஆசிரியர்கள், நமது அறக்கட்டளையின் தலைவர். **திரு. ஸ்ரீதர்** அவர்களும் செயலாளர் **திருமதி. பிரேமா வீரராகவன்** அவர்களும், பிரபாவதி ஆகியோர்களும் கலந்துக் கொண்டார்கள். முதலில் தமிழ்தாய் வாழ்த்து மற்றும் கொடிப்பாடலுடன் ஆரம்பிக்கப்பட்டு, குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள் தேசத் தலைவர்களை பற்றி பேசினார்கள். கிளை அலுவலகத்தில் சுதந்திர தினவிழா கொண்டாடப்பட்டது.



**ஆகஸ்ட் 27** நமது தலைவர் திரு. ரெங்கநாதன் அவர்களின் பிறந்த நாள் அன்று **திருமதி. சாந்தி** (தலைமை ஆசிரியர், செந்திலாண்டவன் உயர்நிலைப்பள்ளி) அவர்களால் வளமையம் (**resource Centre)** திறந்து வைக்கப்பட்டது. வளமையத்திற்கான உபகரணங்கள் செய்யப்பட்டது. **You Tube** க்கான video க்கள் ஒவ்வொரு வாரமும் எடுக்கப்பட்டது.











**செப்டம்பர் 5** ஆம் நாள் ஆசிரியர் தினவிழாவை முன்னிட்டு Conference call மூலம் RV School குழந்தைகள், ஆசிரியர்கள், ஆனந்தம் அறக்கட்டளையைச் சேர்ந்த நமது ரோட்டரி வித்யாரம்பம் பள்ளியின் கொடையாளர் **திரு. பாலசுப்ரமணியன்** அவர்களும், நமது அறக்கட்டளையின் பொருளாளர் **திரு. ஸ்ரீராம்** அவர்களும், **திருமதி. பிரபாவதி** அவர்களும் கலந்துக்கொண்டார்கள். கிளை அலுவலகத்தில் ஆசிரியர் தினவிழா கொண்டாடப்பட்டது. இதில் குழந்தைகளுக்கு ஆசிரியர் தினம் எதற்காக கொண்டாடுகிறோம் என்பதைப் பற்றி பேசப்பட்டது. அதுமட்டுமின்றி குழந்தைகள் கப்பல் செய்து காட்டினார்கள்.

**செப்டம்பர்** இரண்டாம் வாரம் முதல் பழைய மாணவர்களின் கணக்கெடுப்பு (Alumni Survey) மற்றும் அவர்களின் அனுபவங்கள் பற்றியும் உரையாடப்பட்டது.







**அக்டோபர் 1 மற்றும் 5** ஆம் நாட்களில் வாகைகுளம், வடக்கு விஜய நாராயணம் மற்றும் விஜய அச்சம்பாடு ஆகிய கிராமங்களில் மையங்கள் ஆரம்பிக்கப்பட்டது.







**அக்டோபர் 2** ஆம் நாள் **காந்தி ஜெயந்தியை** முன்னிட்டு மையக்குழந்தைகள், வித்யாரம்பம் பணியாளர்கள் பிரபாவதி, சிவசாந்தகுமாரி, மணிமேகலை, மீனா, சீதாலெட்சுமி மற்றும் கவிக்கண்ணன்(இராமேஸ்வரம், திருநெல்வேலி) Conference call மூலம் விடுதலைப் போராட்ட தலைவர்கள் பற்றி பேசப்பட்டது. மெர்லின் என்ற குழந்தை காந்தியடிகள் பற்றி பேசினார்கள் மற்றும் **Pre test** எடுக்கப்பட்டது.



நமது (House owner) சண்முக பாண்டியன் அவர்கள் அளித்த முக கவசத்தை பயிற்றுனர் மூலம் விஜயநாராயணம் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது.



**10.11.2020 மற்றும் 11.11.2020** ஆகிய நாட்களில் நமது மையங்களில் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. இதில் அனைத்து குழந்தைகளுக்கும் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் கொடுக்கப்பட்டது.



## தூத்துக்குடி மாவட்டம்

**01.04.20 முதல் 30.04.20** வரை கொரோனா வைரஸ் பரவுதலின் காரணமாக தொண்டர்கள் அனைவரும் வீட்டிலிருந்தே பாட உபகரணங்களை தயார் செய்யும் பணியை மேற்கொண்டோம்.



**01.05.20 முதல் 30.06.20** வரை வித்யாரம்ப தொண்டர்கள் வீட்டிலிருந்தும், வாரத்தில் சில நாட்கள் அலுவலகத்தற்கு வந்திருந்தும் பணியை தொடங்கினோம். தொண்டர்களால் கீழ்க்கண்ட **கற்றல் உபகரணங்கள்** உருவாக்கப்பட்டது.

**01.07.20 முதல் 31.08.20** வரை **Work from Home** மற்றும் வாரத்தில் சில நாட்கள் அலுவலகத்திற்கு வந்திருந்து கீழ்க்கண்ட **கற்றல் உபகரணங்கள்** உருவாக்கப்பட்டது.




**10.08.20 அன்று** சங்கரன்கோவில் கிளை அலுவலகத்தில் வித்யாரம்ப தொண்டர்களின் சார்பாக **செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நட்டு** பராமரிக்கப்பட்டு வருகிறது.



**15.08.20 சுதந்திர தினத்தன்று** நமது **RV** பள்ளியின் சார்பாக **Conference Call** நடைபெற்றது. அதில் RV பள்ளி ஆசிரியர்களான **கஸ்தூரி தலைமையில் ராகசுதா, அமுதா ஆசிரியர்களுடன் குழந்தைகள் இருவரும்,** சிறப்பு விருந்தினராக சென்னையிலிருந்து **திரு. ஸ்ரீராம் அவர்கள், திருமதி. விஜி மேடம்** மற்றும் சங்கரன்கோவில் கிளை மாநில துணை ஒருங்கிணைப்பாளர் **திருமதி. கோமதி** ஆகியோர்கள் கலந்துக்கொண்டார்கள். இதில் கொடிப்பாடல் பாடப்பட்டு தலைவர்கள் பற்றி பேசப்பட்டது. **திருமதி. விஜி** அவர்கள் குழந்தைகளுடன் கலந்துரையாடி தனது கருத்துக்களை சிறப்பாக உரையாடினார்.



**27.08.20** அன்று வித்யாரம்பம் அறக்கட்டளையின் நிறுவனர் **திரு. வி. ரெங்கநாதன் ஐயா** அவர்களின் பிறந்த நாளையொட்டி ஒவ்வொரு கிளை அலுவலகத்திலும் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட **வளர்ச்சி மையம்** (**Resource Room**) திறக்கப்பட்டது. சங்கரன்கோவில் கிளை அலுவலகம் சார்பாக கணித வளர்ச்சி மையம், கரிவலம்வந்தநல்லூர் ஊராட்சிமன்ற தொடக்கப்பள்ளியின் தலைமையாசிரியர் **திருமதி. பரமேஸ்வரி** அவர்கள் திறந்து வைத்து, பாராட்டி சிறப்பித்தார். வெள்ளப்பனேரி அரசு உயர்நிலைப்பள்ளியின் ஆசிரியர் மற்றும் நமது முன்னாள் மாநில துணை ஒருங்கிணைப்பாளரான **திரு. முத்துக்குமாரசாமி** அவர்கள் வழிமொழிந்தார்கள். மேலும் மெருகேற்றிட சில ஆலோசனைகளை வழங்கினார். இறுதியாக மாநில துணை ஒருங்கிணைப்பாளர் **திருமதி. கோமதி** அவர்கள் இனிப்புகள் மற்றும் நினைவுப்பரிசுகள் வழங்கி விருந்தினர்களை கௌரவித்தார்கள். இனிதே விழா நிறைவுப்பெற்றது.



**01.09.20 முதல் 31.09.20** வரை செப்டம்பர் மாதம் தொடர்ந்து தொண்டர்கள் அலுவலகத்திற்கு வந்திருந்து கீழ்க்கண்ட **கற்றல் உபகரணங்கள்** செய்யப்பட்டது.

**28.09.20 முதல் 30.09.20** வரை கொரோனா வைரஸ் பரவாத 2 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த கிராமங்களில் 4ம் மற்றும் 5ம் வகுப்பு மாணவர்களுக்கு நமது வித்யாரம்ப உறுதுணை மையங்கள் 3 ஆரம்பிக்கப்பட்டது.





**02.10.20 காந்தி ஜெயந்தி** தினத்தன்று ஒவ்வொரு கிளை அலுவலகத்திலும் **Conference Call** நடைபெற்றது. சங்கரன்கோவில் கிளையின் சார்பாக **Conference Call**-லில் மாநில துணை ஒருங்கிணைப்பாளர் **திருமதி. கோமதி** அவர்கள் தலைமையில், சென்னையிலிருந்து **திரு. ஸ்ரீராம்** அவர்களும், வீரணாபுரம் வசந்தா தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியர் **திரு. பக்தன்** அவர்களும், விருந்தினராக கலந்துக்கொண்டார்கள். மைய குழந்தைகளான **துவிஷ்னா, கௌரி, அபிநயா** ஆகிய மூவரும், வித்யாரம்ப கிளை தொண்டர்கள் ஏழு நபர்களும் கலந்துக்கொண்டார்கள். **காந்தி ஜெயந்தி வாழ்த்துக்களையும், கர்ம வீரர் காமராஜர்** அவர்களின் நினைவு நாளையும் நினைவூட்டி, கதைகளின் மூலம் குழந்தைகளுக்கு ஆலோசனைகள் மற்றும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

**09.10.20 மற்றும் 10.10.20** ஆகிய இரு தினங்களில் Lockdown உறுதுணை மையங்களில் குழந்தைகளுக்கு Pre Test வைத்து திறன் அறியப்பட்டது.





**15.10.20 அன்றிலிருந்து** 2002 - 2020 ல் கல்வியாண்டு வரை நமது அறக்கட்டளையில் பயின்ற பழைய மாணவர்களின், தற்போதைய விவரங்களை சேகரிக்கும் பணி (**Alumni Survey)** நடைபெறுகின்றது.

**26.10.20 அன்று** கிளை அலுவலகத்தில் வைத்து **சரஸ்வதி பூஜை** தொண்டர்களால் கொண்டாடப்பட்டது.



**27.10.20 அன்று** சங்கரன்கோவில் கிளை அலுவலகத்தில் Lockdown SMLC மையம் ஒன்று நமது தொண்டர்களால் ஆரம்பிக்கப்பட்டு, குழந்தைகளுக்கு **Pre Test** நடத்தப்பட்டது.



**09.11.2020, 10.11.2020 மற்றும் 11.11.2020** ஆகிய நாட்களில் நமது மையங்களில் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. இதில் அனைத்து குழந்தைகளுக்கும் போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள் கொடுக்கப்பட்டது.

# திருச்சி மாவட்டம்





**March - 19** லிருந்து **May – 18** வரை கொரோனாவால் எல்லாரும் **Office ற்கு** வராமல் வீட்டிலிருந்தே **Hand made ஆக Card holder, Paper straw, Toy clock, Tangram, Weighing balance, Coding, Parts of Speech, Letter chart Big size, Letter Card ( க - ன, ெ, ே, ா, ஐ ), Number Card ( 0 - 9 )** என பொருட்கள் தயாரிக்கப்பட்டன. அனைவரும் அவரவர் வீட்டிலிருந்தவாறே **Materials** செய்து **Whatsapp மூலம் Share** செய்து கொண்டோம். இதன் மூலம் நிறைய Hand made தயாரிக்கப்பட்டு எந்த பொருளாக இருந்தாலும் Hand made மூலம் நாமே தயார் செய்து கொள்ளலாம் என எங்களிடையே இந்த **Lockdown ல்** தன்னம்பிக்கை வளர்ந்தது.

**மே 19- ம்** தேதியிலிருந்து அனைத்து Staff – களும் அலுவலகத்திற்கு வருகை புரிந்து Handmade materials ( Paper straw, tangram, paperdice) தயாரிக்கப்பட்டது.



**June மற்றும் July** மாதத்தில் அனைத்து area விலும் **Resource room** ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு Subject கொடுக்கப்பட்டு எங்களுடைய மாவட்டத்திற்கு English Resource room சம்பந்தப்பட்ட கல்வி உபகரணங்கள் Capital & small letters, **A to Z & a to z, Picture with name (Things, Vegetables, Fruits, Flowers, Birds), Word wall, Sentence making (This, that, these, those), Let us learn (Mothers and young ones), Question making (What, Where, How many), Singular & plural, Homophones, Tense, Punctuation, Parts of speech** என **Chart work** தயாரிக்கப்பட்டது.





**August** மாதத்தில் Preposition (in, on, under, near), Articles (a, an, the), Clipped words, Compound words, Syllabification, Picture interpretation, Story telling, Word Bank, Degrees of comparison, Voice, Circle the past verb, Cross word என சில Chart work செய்யப்பட்டு **V. R. Sir பிறந்த நாள் அன்று**

அனைத்து மாவட்டகளிலும் **வளமையங்கள்** திறக்கப்பட்டது. திருச்சி மாவட்ட **English Resource room** திறப்பு **விழாவிற்கு புதூர்பாளையம் P. U. P. School தலைமை ஆசிரியர் திருமதி. குமாரி சச்சு MA., BEd.** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு சிறப்பித்தார்கள்.

**September** - 5 அன்று **ஆசிரியர் தினவிழாவையொட்டி** நமது அலுவலகத்தை சுற்றியுள்ள குழந்தைகளுக்கு வகுப்புகள் நடத்த ஆரம்பிக்கப்பட்டது. அதன்பிறகு எங்களது கிளை அலுவலகத்திற்கு குழந்தைகள் அனைவரும் ஆர்வத்துடன் வகுப்பிற்கு வருகை புரிகின்றனர்.










**அக்டோபர் 1- ம்** தேதியிலிருந்து lockdown வகுப்புகள் திண்டுக்கல் மாவட்டத்தில் 2 மையங்களும் திருச்சி மாவட்டத்தில் 3 மையங்களும் அமைக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. **அனைவரும் சமூக இடைவெளியுடனும், மாஸ்க் அணிந்துக் கொண்டும், சுத்தம்** போன்றவைகளை கடைப்பிடித்தும் வகுப்புகள் நடந்துக்கொண்டிருக்கின்றன.



**அக்டோபர் 5 முதல் 9** ந் தேதி வரை திருச்சி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் lock down வகுப்புகளுக்கு **Pre test** (சுற்று) எடுக்கக்பட்டது.

**24-10-2020** அன்று எங்களது கிளை அலுவலகத்தில் குழந்தைகள் மற்றும் Staff அனைவராலும் ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி பூஜை சிறப்பாக கொண்டாடப்பட்டது.





**நவம்பர் 9,10,11,19** ஆகிய நாட்களில் திருச்சி மையங்களில் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. **11.11.2020 மற்றும் 12.11.2020** ஆகிய நாட்களில் திண்டுக்கல் மையங்களிலும் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. இதில் அனைத்து குழந்தைகளுக்கும் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் கொடுக்கப்பட்டது.




## அரியலூர் மாவட்டம்



**ஏப்ரல் மற்றும் மே**- வில் **Handmade Materials (Paper straw, Tangram, Paper Dice, Clock, Card holder)** இந்த பொருட்கள் அனைத்து Assessor மற்றும் Co-odinator மூலம் செய்யப்பட்டது.



**ஜுன்** -ல் Handmade Materials (Paper straw, Paper Dice) Assessor மற்றும் Co-odinator மூலம் செய்யப்பட்டது. மேலும் **Centers Materials** பிரிக்கப்பட்டு Stock சரி செய்யப்பட்டது.



**ஜுலை** -ல் Handmade Materials (Card holder, Strip Holder, Coding, Tamil letter chart Big, Number card 0-9, Letter plug card) இந்த பொருட்கள் அனைத்து Assessor மற்றும் Co-odinator மூலம் செய்யப்பட்டது.

**ஆகஸ்ட்** -ல் Resource center உரிய தமிழ் Materials தயார் செய்து அதற்கான Room-ல் ஒட்டப்பட்டது.

**27-08-2020** நாகப்பட்டினம் ஆசிரியர்கள், அகிலா, விமலா மற்றும் **திரு. C.K ஸ்ரீதர்** சார் அவர்களுடன் Conference call-ல் திரு v. ரெங்கநாதன் ஐயா அவர்களுடன் பயணித்த மற்றும் கற்றுக்கொண்ட அனுபவங்களை பகிர்ந்துக்கொண்டனர்.





**27-08-2020** அன்று திருமானூர் அலுவலகத்தில் கௌரவ ஒருங்கிணைப்பாளர் **திரு. T.K.S கைலாசம்** அவர்கள் முன்னிலையில் திருமானூர் G.K.M நகர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி ஆசிரியை திருமதி. ரேவதி அவர்களால் **திரு. V. ரெங்கநாதன்** சார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழ் **Resource center** ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் ஆசிரியை மற்றும் கௌரவ ஒருங்கிணைப்பாளர் அவர்களின் கருத்துக்களை கூறினர். Resource center- ல் உள்ள Materials-ஐ பார்வையிட்டு அதன் பயன்பாட்டை கேட்டறிந்தனர்.



**05-09-2020** அன்று திருமானூர் அலுவலகத்தில் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. அதில் அருகில் உள்ள குழந்தைகள் கலந்துக் கொண்டனர். அவர்களுக்கு சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது. அதன்பின் **Resource center**- ல் உள்ள Materials-ஐ பயன்படுத்தி விளையாடி மகிழ்ந்தனர்.



**செப்டம்பர்** மாதத்தில் **Resource center**- உரிய சேவகன் 3D தயார் செய்யப்பட்டது. மேலும் Alumni survey எடுக்கப்பட்டது.





**28-09-2020** அன்று இலந்தைக்கூடம் கிராமத்தில் SCJ மற்றும் SCS வகுப்புகள் சமூக இடைவெளியுடன் ஆரம்பிக்கப்பட்டது. அனைவரும் **Mask** அணிந்து வந்தனர். அவர்களுக்கு சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது.

**02.10.2020** அன்று காந்தி ஜெயந்தியை முன்னிட்டு திருமதி. ஸ்ரீமதி அவர்களுடன், **VT Assessors மற்றும் Old Students Conference call**-ல் தொடர்புக்கொண்டு சுதந்திர போராட்ட வீரர் காந்தியடிகளை பற்றி கலந்துரையாடினார்கள். திருமதி. ஸ்ரீமதி அவர்கள் காந்தியடிகளின் சுயசரிதையை கதை மூலமாக மாணவர்களிடம் கூறினார். Old Students வித்யாரம்பத்தில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்துக்கொண்டனர்.




**05-10-2020** அன்று திருமானூர் அலுவலகத்தில் **Museum** ஆரம்பிக்கப்பட்டது. அதில் 2002 முதல் தற்சமயம் வரை நமது அறக்கட்டளை மூலம் அறிமுகப்படுத்திய மற்றும் உபயோகப்படுத்திய Materials அனைவரும் பார்க்கும் வகையில் அமைக்கப்பட்டது.

**24-10-2020** அன்று **ஆயுதபூஜை, விஜயதசமி விழா** திருமானூர் அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது அதில் அருகில் உள்ள குழந்தைகள் கலந்துக்கொண்டனர்.






**30-10-2020** அன்று திருமானூர் வடக்கு தெருவிற்கு அலுவலகத்தை இடம் மாற்றம் செய்யப்பட்டு பால் காய்ச்சப்பட்டது.



**12.11.2020** அன்று நமது மையத்தில் குழந்தைகள் தின விழா கொண்டாடாப்பட்டது. இதில் அனைத்து குழந்தைகளுக்கும் போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள் கொடுக்கப்பட்டது.



## நாகப்பட்டினம் மாவட்டம்





**March 19** லிருந்து **May 18** வரை கொரோனா வைரஸ் பரவுதலின் காரணமாக அனைத்து வித்யாரம்ப அலுவலகங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டதால் அனைத்து தொண்டர்களும் வீட்டிலிருந்தவாறே **Activity** செய்தார்கள்.

**May 19** தேதியிலிருந்து அனைத்து தொண்டர்களும் அலுவலகத்திற்கு வருகை புரிந்து **Handmade Materials ( Paper straw, Tangram, Paper dice, Letter Card, Number Card (0 to 9), Weighing Balance, Toy Clock, Strip Holder, Singular & plural )** தயாரிக்கப்பட்டது.



**June** மற்றும் **July** மாதத்தில் அனைத்து வித்யாரம்ப அலுவலகங்களிலும் வளமையம் திறப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு பாடத் தலைப்பு கொடுக்கப்பட்டது. எங்களுடைய மாவட்டத்திற்கு அறிவியல் மற்றும் சமூக அறிவியல் கொடுக்கப்பட்டது. அதற்கான செயல்பாடுகளை செய்து **Resource Room** தயார் செய்யப்பட்டது.





**Aug 27** அன்று எங்களது வித்யாரம்ப அறக்கட்டளையின் தலைவர் **V. ரெங்கநாதன் ஐயா** அவர்களின் பிறந்த நாளன்று அனைத்து வித்யாரம்ப கிளைகளிலும் வளமையம் திறக்கப்பட்டது. சீர்காழி அலுவலகத்தில் அறிவியல் மற்றும் சமூக அறிவியலுக்கான வளமையங்களை திறந்து வைப்பதற்காக நிம்மேலி நெப்பத்தூர் P.U.M. School உதவி தலைமை ஆசிரியர் **திரு. S. சீனிவாசன் M.com., M.phil., B.A., B.Ed., D.T.ED** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு வளமையத்தை திறந்து வைத்தார். வளமையத்தில் உள்ள பொருட்களை பார்வையிட்டு அதைப்பற்றிய கருத்துக்களை நம்மோடு பகிர்ந்துக்கொண்டார்.




**Sep 5** அன்று **ஆசிரியர் தினவிழாவையொட்டி** நமது மையம் நடைபெறும் ஆலவேலி கிராமக் குழந்தைகளுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டது.





**Sep 18** Lockdown வகுப்புகளுக்கு வரும் குழந்தைகளுக்காக **திரு. ரெங்காச்சாரியார் ஐயா** அவர்கள் **முகக்கவசம் மற்றும் Handwasher** நமது மையக் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கினார்கள்.

**Sep 21-ம்** தேதிலிருந்து **கண்ணாங்குளம், சீயாளம், கண்டமங்கலம்** ஆகிய கிராமங்களில் **Lockdown வகுப்புகள்** ஆரம்பிக்கப்பட்டது. அனைத்து குழந்தைகளும் மஞ்சள் மற்றும் வேப்பிலை கலந்த தண்ணீரில் கை, கால்களை கழுவியும், சமூக இடைவெளியுடனும், முகக்கவசம் அணிந்துக்கொண்டும் Hygienic போன்றவைகளை கடைபிடித்தும் வகுப்புகள் நடந்துக்கொண்டிருக்கிறது.







**30.09.2020** அன்று **Lockdown** வகுப்புகள் நடைபெறும் மையங்களில் உள்ள குழந்தைகளுக்கு **Pre Test** எடுக்கப்பட்டது.

**02.10.20** காந்தி ஜெயந்தி தினத்தன்று ஒவ்வொரு கிளை அலுவலகத்திலும் **Conference Call** நடைபெற்றது. சீர்காழி அலுவலகத்தின் சார்பாக **Conference Call**-லில் **திரு. C.K. ஸ்ரீதர் Sir** அவர்கள் **திருமதி. கார்த்திகா மேடம்,** ஒருங்கிணைப்பாளர் **திருமதி. ராதிகா** மற்றும் **கண்ணாங்குளம்** தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியர் **திருமதி. அற்புதவள்ளி,** அப்பள்ளியின் ஆசிரியர் **திரு. ஜோதிலிங்கம்,** நமது மைய ஆசிரியர் **திருமதி. உமா மற்றும் குழந்தைகளும், பெற்றோர்களும்** கலந்துக்கொண்டு காந்தி ஜெயந்தி விழாவினை சிறப்பித்தார்கள். மேலும் நமது மையத்தில் படிக்கும் குழந்தை சபரி அவர்கள் தேசத்தந்தை காந்தியடிகள் பற்றிய ஒரு சில கருத்துகளையும்,

அப்பள்ளியின் ஆசிரியர் **திரு. ஜோதிலிங்கம்** அவர்கள் சுதந்திர போராட்ட வீராங்கனை **தில்லையாடி வள்ளியமை** பற்றிய கருத்துகளை நம்மோடு பகிர்ந்துக்கொண்டார்கள்.



வித்யாரம்ப அறக்கட்டளைக்காக **திரு. பிரபாகரன் ஐயா** அவர்கள் இலவசமாக கொடுத்த இடத்திற்கு **04.10.2020** அன்று **திரு. C.K. ஸ்ரீதர் Sir** தலைமையில் **திருமதி. கார்த்திகா மேடம்,** ஒருங்கிணைப்பாளர் **திருமதி. ராதிகா மற்றும் சுமதி, பிரவீணா, கௌசல்யா** அனைவராலும் அந்த இடம் வித்யாரம்பத்திற்கு சொந்தமானது என்ற தகவல் பலகை வைக்கப்பட்டது.



**24.10.2020** அன்றிலிருந்து 2002–2020 நம்மிடம் படித்த வித்யாரம்ப பழைய மாணவர்களுடைய தகவல்களை (**Alumni survey)** எடுக்க ஆரம்பிக்கப்பட்டது.



**26.10.2020** அன்று வித்யாரம்ப கிளை அலுவலகத்தில் **சரஸ்வதி பூஜை** கொண்டாடப்பட்டது. இதில் திருமதி. கார்த்திகா மேடம், ஒருங்கிணைப்பாளர், மதிப்பீட்டாளர்கள் மற்றும் கணிணி பயிற்றுனர் ஆகியோர் கலந்துக்கொண்டார்கள்.




**9-11-2020, 10-11-2020** மற்றும் **11-11-2020** ஆகிய நாட்களில் Lock down வகுப்புகள் நடக்கும் மையத்தில் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. விழாவில் கலந்துக்கொண்ட அனைத்து குழந்தைகளுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் கொடுக்கப்பட்டது.




**26.11.2020** அன்று கண்ணாங்குளம், சீயாளம், கண்டமங்கலம் ஆகிய நமது மையங்களில் பணிப்புரியும் ஆசிரியர்களுக்கு **நிவர் புயலின்** தாக்கத்தின் காரணமாக **Ullas Trust திருமதி. சுகன்யா மேடம்** அவர்களால் தார்ப்பாய் வழங்கப்பட்டது.

**17.12.2020** அன்று சென்னையை சேர்ந்த **திரு. V. ராமானுஜம் அவர்கள்** நமது வித்யாரம்ப மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கு எழுதுகோல் இலவசமாக வழங்கினார்.



## சென்னை







**14.10.2020** அன்று சென்னை அலுவலகத்தில் ஆங்கிலத்திற்கான **"Resource Centre"** காந்திகிராமம் சென்னை நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் **திருமதி. உத்ரா** அவர்கள் தலைமையேற்று திறந்து வைத்தார்கள். அவர்களுடன் அப்பள்ளி ஆசிரியை **திருமதி. கோமதி** அவர்களும் கலந்துக்கெண்டார்கள். பின்பு தலைமை ஆசிரியை திருமதி.உத்ரா அவர்களால் விளக்கேற்றி **"Resource Centre"** - ஐ துவக்கிவைத்தார்கள். மேலாளர் **திருமதி. விஜி சீனிவாசன்** அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். பின்பு மையத்தில் வைக்கப்பட்டிருந்த செயல்முறைகளை மதிப்பீட்டாளர், மற்றும் மைய ஆசிரியர்களால் விளக்கத்துடன் எடுத்துரைக்கப்பட்டது. சென்னை மையத்தில் உள்ள அனைவரும் பங்கேற்று சிறப்பித்தனர்.



**03.11.2020** அன்று **திரு. பாரி,** Triumphant Thursday Youtube சேனலில் இருந்து நமது டிரஸ்ட் பற்றிக் கேட்டு அறிவதற்காக வந்தார்கள். சென்னை மையத்தின் மதிப்பிட்டாளர் அபிஷா அவர்கள் நமது டிரஸ்ட் பற்றியும் மற்றும் **English Resource Centre** பற்றியும் மற்றும் அதன் செயல்முறைகளையும் விளக்கிக் கூறினார்கள்.



**26.10.2020** அன்று நமது சென்னை அலுவலகத்தில் சரஸ்வதி பூஜை சிறப்பாக நடைபெற்றது.

## இராமநாதபுரம் மாவட்டம்

**மே 2020,** முதல் செப்டம்பர் 2020 வரை கிளை அலுவலகத்தில் மற்றும் வீடுகளில் வைத்தும் உபகரணங்கள் தயார் செய்யப்பட்டது. Webinar class கலந்து கொண்டோம்.
















**ஆகஸ்ட் 15** ஆம் நாளுக்குப் பின் வித்யாரம்பம் மதிப்பீட்டாளர், துணை ஒருங்கிணைப்பாளர் மற்றும் பயிற்றுனர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று குழந்தைகள் மற்றும் பெற்றோர்களை சந்தித்து கலந்துரையாடப்பட்டது.








**செப்டம்பர்** மாதம் Pre test எடுக்கப்பட்டது.





**அக்டோபர்** மாதம் மையங்கள் ஆரம்பிக்கப்பட்டது.

**19.10.2020** மற்றும் **20.10.2020** ஆகிய நாட்களில் மதிப்பீட்டாளர் மற்றும் பயிற்றுனர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.







**நவம்பர்** 1 ஆம் தேதியிலிருந்து தரவைத்தோப்பு கிராமத்தில் புதிய பயிற்சி மையம் துவங்கப்பட்டு 28 குழந்தைகள் படிக்கின்றனர்.



**நவம்பர் 9** ஆம் தேதி அன்று இராமநாதபுரம் மாவட்டத்தின் புதிய ஆட்சி தலைவராக பொருப்பேற்றுள்ள **திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்** அவர்கள் தலைமையில் **NSE** அறக்கட்டளையின் கீழ் இயங்கும் அனைத்து தன்னார்வு அமைப்பு சார்பாக அறிமுக கூட்டம் நடைப்பெற்றது. இந்த கூட்டத்தில் வித்யாரம்பம் சார்பாக **திரு. கவிகண்ணன்** அவர்கள் பங்கேற்றார். இக்கூட்டத்தில் **NSE** அமைப்பின் கீழ் இயங்கும் அனைத்து அமைப்புகளும் பங்கேற்றனர்.

**12-11-2020** மற்றும் **13-11-2020** ஆகிய நாட்களில் Lock down வகுப்புகள் நடக்கும் மையத்தில் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. குழந்தைகளுக்கான கட்டுரை, கவிதை, ஓவியம் மற்றும் பேச்சி போட்டிகள் நடத்தப்பட்டது. விழாவில் கலந்துக்கொண்ட அனைத்து குழந்தைகளுக்கும் பரிசுகள் கொடுக்கப்பட்டது.







**டிசம்பர்** 1 ஆம் தேதியிலிருந்து மாங்காடு கிராமத்தில் பயிற்சி மையங்கள் துவங்கப்பட்டது. இங்கு 33 மாணவர்களுக்கு பாடம் சொல்லித் தரப்படுகின்றது.







**05-12-2020** மற்றும் **06-12-2020** ஆகிய தேதிகளில் நமது ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் கொடுக்கப்பட்டது. தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களை மாணவர்களுக்கு புரிந்த வகையில் எப்படி நடத்துவது போன்ற பயிற்சிகள் கொடுக்கப்பட்டது. இது தவிர வாராந்திர செயல் திட்டம் உருவாக்குவது பற்றியும் பயிற்சி கொடுக்கப்பட்டது.







## ரோட்டரி வித்யாரம்பம் பள்ளி, சாமந்தான்பேட்டை, நாகப்பட்டினம்

**மே மாதம்** : மே மாதம் முழுவதும் ஆசிரியர்கள் வீட்டிலிருந்தபடியே பாடத்திட்டத்திற்கு ஏற்ப பாட உபகரணங்களைச் செய்தார்கள்.

**ஜுன் மாதம்** : ஜுன் மாதம் முழுவதும் பள்ளித் தாளாளர் அவர்கள் ஆசிரியர்களுக்கு தினசரி அட்டவணை ஒன்றை உருவாக்கினார்கள். அதில் **News paper Copying, Loud Reading, Picture Interpretation , Individual activity, Dictionary words, Hints Development** போன்றவற்றை ஆசிரியர்கள் தினசரி செய்து அனுப்பினார்கள்.

தங்களது வகுப்பு குழந்தைகளுக்கு Whats app ல் குழு ஒன்று உருவாக்கி அதில் மாணவர்களுக்கு எளிய பாடச்செயல்பாடுகள் அனுப்பி வைத்தனர். மாணவர்களும் ஆர்வமுடன் தங்களது பாடச்செயல்பாடுகளை முடித்து அனுப்பினர்.

**ஜுலை மாதம்** : ஜுலை மாதம் முழுவதும் **News paper Copying, Loud Reading, Picture interpretation, Individual activity, Hints Development,** போன்றவற்றை ஆசிரியர்கள் தினசரி செய்து அனுப்பினார்கள். மேலும் ஆசிரியர்கள் முதலாம் பருவத்திற்கான பாடத்திட்டத்தினை எழுதினார்கள். ஜுலை மாதமும் மாணவர்களுக்கு எளிய பாடச்செயல்பாடுகள் அனுப்பப்பட்டன.

**ஆகஸ்ட் மாதம்** : தினசரி அட்டவணையில் **Dictionary words – Tamil & English, Hints Development, Text book Copying - Tamil & English** போன்றவற்றை ஆசிரியர்கள் செய்து அனுப்பினார்கள். மேலும் 2020 - 2021 கல்வியாண்டிற்கான பாடப்புத்தகம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு புதிய பாடப்புத்தகத்திலிருந்து Work Sheet அனுப்பினார்கள். Whats app இருக்கும் மாணவர்கள் தங்களது Work Sheet யை முடித்து அனுப்பினார்கள்.

**15.08.2020** சுதந்திர தின விழா அன்று குழந்தைகள், ஆசிரியர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அறங்காவலர்கள் Conference call மூலம் ஒருங்கிணைந்து தேசத் தலைவர்கள் பற்றி பேசி கலந்துரையாடினார்கள்.



**22.08.2020** அன்று பள்ளியில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட்டது. குழந்தைகள் தாமே செய்த விநாயகர் சிலைகள் மற்றும் இலைகளால் செய்யப்பட்ட விநாயகர் உறுவங்களை பள்ளிக்கு எடுத்துவந்து விநாயகர் சதுர்த்தி விழாவில் கலந்து கொண்டனர்.



**27.08.2020** வித்யாரம்பம் விதயாரம்பம் அறக்கட்டளையின் தலைவர் திரு. ரெங்கநாதன் ஐயா அவர்களின் பிறந்த நாள் விழாவில் குழந்தைகள், ஆசிரியர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அறங்காவலர்கள் Conference call மூலம் ஒருங்கிணைந்து தங்களின் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

**செப்டம்பர் மாதம்** : இந்த மாதம் முழுவதும் ஆசிரியர்களுக்கு **Hints Development, Nature walk things Describing writing** மட்டுமே கொடுக்கப்பட்டது. மேலும் ஆசிரியர்கள் புதிய பாடப்புத்தகத்திலிருந்து **Work Sheet** யை தினமும் அனுப்பி வருகின்றனர். வாரம் ஒருமுறை **ART & CRAFT Work** ம் கொடுக்கப்படுகின்றன.

**05.09.2020** ஆசிரியர்கள் தினம் Conference call மூலம் நடத்தப்பட்டது.

**02.10.2020** காந்தி ஜெயந்தி விழா Conference call மூலம் நடத்தப்பட்டது.



**19.10.2020** கொலு பூஜை வைக்கப்பட்டது.




**அக்டோபர் 26**- கொலு பூஜை நிறைவு செய்யப்பட்டது. அதன்பின் 2021 -2022 மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றது.





நவம்பர் 9 ஆம் தேதி குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பரிசுகள் வாட்ஸப் குழுவில் தினமும் பதில் அளிக்கும் மாணவர்கள் மற்றும் கதை கூறியவர்கள், பாடல் பாடியவர்கள், கையெழுத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் என மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு கிளை அலுவலகத்திலும் திறக்கப்பட்ட **வளர்ச்சி மையம்** கீழ்கண்ட திட்டத்தின் அடிப்படையில் நடைபெற்று வருகிறது.





## நன்றி

Editor: Coordinators

(For private circulation only)

Vidyarambam Trust

Park View Apartments, II floor,

No: 85/94, G.N.Chetty Road,

T.Nagar, Chennai – 600 017

(For private circulation  Website: www.vidyarambam.org)

Email: vidyarambam@gmail.com

Website: www.vidyarambam.org

Phone: 044 -28152590

Email: vidyarambam@gmail.com